பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(களனி பல்கலைக்கழகம்)

# நிதிக் கூற்று

## 2016



## 01. தொலைநோக்கு

**தொலைநோக்கு**

பாளி, பௌத்த கல்விக்கான உலகின் சிறந்த பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி நிறுவனமொன்றாதல்

## 02. செயற்பணி

**செயற்பணி**

பாளி, பௌத்த கல்வித்துறையில் அறிவு, கருத்து மற்றும் ஆராய்ச்சி முதலியவற்றின் ஆற்றல் அபிவிருத்திக்காக கல்வியாளர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களையும் வசதிகளையும் உருவாக்கிக் கொடுக்கும் முன்னோடியாகச் செயலாற்றுதல்.

## பொருளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| தொலைநோக்கும் செயற்பணியும் | |
| பணிப்பாளர் தேரோ அவர்களின் மீளாய்வு | |
| முகாமைத்துவ சபை | |
| மூதவை | |
| நிறுவனத்தின் நிருவாக மற்றும் கற்கைக் கட்டமைப்பு | |
| பதவியணி தொடர்பிலான விபரங்கள் | |
| கணக்காய்வுக் குழு | |
| பாடநெறிகள் பற்றிய விபரம் | |
| மாணவர் விபரம் | |
| பரிசு வழங்கல் | |
| கல்வி பதவியணியினர் | |
| ஆராய்ச்சி, புத்தாக்கங்கள், வெளியீடுகள் | |
| நூலகம் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | |
| நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் | |
| கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான நிறுவனத்தின் நிதிநிலைமை | |
| இறுதி கணக்குகள் - 2016 | |

**03. பணிப்பாளர் தேரோ அவர்களின் மீளாய்வு**



(அ) **பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் தொடர்பிலான சுருக்க அறிமுகம்**

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமொன்றாக 1975 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 1980 சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் செயற்பட ஆரம்பித்தது. இந்த நிறுவனம் தற்போது பௌத்த தத்துவ கற்கைப் பிரிவு, பௌத்த கலாசார கற்கைப் பிரிவு மற்றும் பௌத்த மூலதத்துவ கல்வி கற்கைப் பிரிவு ஆகிய மூன்று கற்கைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாளி மற்றும் பௌத்த கல்வி பாடத்திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கலைமானி, தத்துவமானி, முதுமானி ஆகிய பட்டப்பின்படிப்பு பட்டங்களை வழங்குவதற்கு இந்த நிறுவனத்தின் ஊடாக கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்பத்திலிருந்து இதுவரை பாளி மற்றும் பௌத்த கல்வி துறைசார்ந்த ஏழு கல்விமான்கள் இதன் பணிப்பாளர் பதவியை வகித்துள்ளனர். தற்போது தேரவாத பௌத்த தர்மம் தொடர்பிலான பாளி மற்றும் பௌத்த கல்வி பற்றிய உலகின் பிரதான நிறுவனமாக இது உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பிரபல்யமானமதாகும்.

நான் இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு 2013-10-15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டேன். அப்போது பெப்பிலியான, சுனேத்ரா தேவி பிரிவெனாவில் வாடகை அடிப்படையில் இந்த நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டது. அதன் பின்னர், நிறுவனத்தின் கட்டமைப்புத் தொடர்பில் ஆராய்ந்து அச்சந்தர்ப்பத்தில் நிலவிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக மாண்புமிகு உயர் கல்வி அமைச்சரானவரைச் சந்தித்தேன். அதன் பின்னர், அவருடைய தலைமையில் 2013-11-06 ஆம் திகதியன்று உயர் கல்வி அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. கணிசமானளவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையும் இந்த நிறுவனத்தில் கிடைக்கக் கூடியதாகவிருந்த பௌதிக வளங்கள் இதற்கு போதுமானதாக இல்லாமையும் அவதானிக்கப்பட்டமையினால் வாடகை அடிப்படையில் இந்த நிறுவனமானது கொஹூவல, துட்டுகெமுனு வீதி, 113 ஆம் இலக்க மனையிடத்தில் அமைந்துள்ள கட்டடத்திற்கு 2014-01-25 ஆம் திகதியன்று கொண்டு செல்லப்பட்டது.

இதற்கமைவாக, புதிய கட்டடத்திற்கு சென்றதும் கிடைக்கக்கூடியதாக இருந்ததை விட உயர் மட்டத்தில் பணிப்பாளர் அலுவலகம், விரிவுரை மண்டபங்கள், பிரிவு தலைவர்களின் அலுவலகங்கள், ஆராய்ச்சி பிரிவு, நூலகம், கணனி ஆய்வுகூடம், நிருவாக, மாணவ பணிகள் மற்றும் நிதி ஆகிய பிரிவுகளுக்கு மிக பரந்துபட்ட அத்துடன் நவீன வசதிகளுடன் கூடிய இடவசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமானது.

2016 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனத்தை இயலுமான வரை அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வது எமது அபிப்பிராயமாகும். அதற்காக இதுவரை என்னால் நிறுவனம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட சேவைகளை சுருக்கமாக குறிப்பிடுகின்றேன்.

01. நிறுவனம் தொடர்பிலான அடிப்படை அறிகமுகத்துடனான கைநூலொன்று இருக்காமையினால் அத்தகைய கைநூலொன்றைத் தயாரித்தமை.

02. ஆராய்ச்சி பட்டதாரிகள் சார்பில் பட்டம் வழங்கப்படும் போது அதன் தரத்தினை பேணுவதற்காக புதிய தகவுத் திறன்களைத் தயாரித்தமை.

03. இந்த நிறுவனத்தின் விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியவற்றை நடாத்தும் பணிகளுக்காக கலந்துகொண்ட கல்விமான்களின் எண்ணிக்கை அச்சந்தர்ப்பத்தில் மிக சிறிய எண்ணிக்கையில் காணப்பட்டது. இது தொடர்பில் பரிசீலனை செய்து அதன் பின்னர் தற்போது இலங்கை பல்கலைக்கழகங்களினதும் பாளி மற்றும் பௌத்த கல்வி தொடர்பிலுள்ள சகல நிறுவனங்களினதும் நிபுணர்களின் சேவையை இந்த நிறுவனத்திற்காக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை.

04. பாடநெறியை பூர்த்தி செய்யப்படாதிருந்த தத்துவமானி மற்றும் தத்துவ முதுமானி பட்ட அபேட்சகர்களின் கல்வி நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அவர்களை நிறுவனத்துக்கு அழைத்து ஆலோசனை வழங்கி குறித்த கல்விப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஊக்குவித்தமை.

05. விடயத் துறையில் நிபுணத்துவ அறிவுடைய வெளிவாரி விரிவுரையாளர்களின் மூலம் விரிவுரைகளை நடாத்தி மாணவர்களின் அறிவினை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை.

06. ஆராய்ச்சி சம்மேளனங்களை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை.

07. நிறுவனத்தின் பௌதிக வளங்களை விருத்தி செய்தமை, அலுவலக உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை, நிறுவனத்திற்கு குளிரூட்டல் வசதிகள் செய்யப்பட்டமை.

08. 2015 ஆம் ஆண்டுவரை நிறுவனத்தில் நிரந்தர போதனாசிரியர்கள் நான்கு (04) பேர்கள் மாத்திரம் சேவையாற்றினர். 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மேலும் இரண்டு (02) விரிவுரையாளர்கள் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை அதேபோன்று கல்விசாரா பதவியணியில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை.

09. வாரத்திற்கு ஒருதடவை பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி நிறுவனத்தின் முன்னேற்றத்தினை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டமை.

10. மாதத்திற்கு ஒருதடவை நிறுவனத்தின் பிரிவுத் தலைவர்களுடன் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்படுகின்றமை.

11. வருட ஆரம்பத்தில் நிறுவனத்திலுள்ள அனைவரையும் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டமை, சிங்கள மற்றும் இந்து புதுவருடத்தில் சகல பணியாட்டொகுதியினருடனும் இணைந்து பாரம்பரிய விழுமியங்களை கொண்டாடுகின்றமை, பணியாட்டொகுதியினருக்கான கூட்டங்களை நடாத்தி அவர்களுடைய பிரச்சினைகளை கலந்துரையாடு வதற்கு வாய்ப்பு வழங்கியமை.

12. நிறுவனத்தின் நற்பெயரை பேணும் விதத்தில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப் படுத்தி உள்நாட்டிலும் அதேபோன்று வெளிநாடுகளிலும் மாநாடுகளை

நடாத்தியமை அத்துடன் பிரதான பேச்சாளராக கலந்துகொண்டமை, இதன் மூலம் நிறுவனத்திற்கு சருவதேச ரீதியில் நற்பெயரை ஏற்படுத்தியமை அத்துடன் ஏனைய விரிவுரையாளர்கள் உலகில் நடாத்தப்படும் விரிவுரைகள், செயலமர்வுகள், மாநாடு போன்றவற்றில் கலந்துகொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை.

13. சிங்கப்பூர் Buddhist Library Graduate School நிறுவனத்துடன் நடாத்திச் செல்லப்பட்ட பட்டப்பாட நெறிகளை முறையாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தமை. இந்த நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டில் 18 மாணவர்கள் கல்வி கற்றதோடு, மொத்த வருமானம் 1,637,604.42 ரூபாவாகும்.

14. ஹொங்கொங் Buddha-Dhamma Center நிறுவனத்துடன் உடன்படிக்கை யொன்றை கைச்சாத்திட்டு துணை நிறுவனமொன்றானமை, இந்த நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டில் 43 மாணவர்கள் கல்வி கற்றனர். இதன் மூலம் மொத்த வருமானம் 9,003,220.52 ரூபாவாகும்.

15. சீனாவின் Buddhist Academy of Mt.Putuo நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 2016-10-17 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டமை. இதற்கமைவாக, கல்விந நடவடிக்கைகள் 2017 சனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

16. இந்தோனேஷியாவின் Smaratunga Buddhist College நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தமை. (அண்மையில் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்)

17. இந்த நிறுவனத்தின் பிரதான பிரச்சினையாக நிலவிய நிரந்தரக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. இதற்கமைவாக, களனி பல்கலைக்கழகத்தின் முத்துராஜவெல காணியிலிருந்து 02 ஏக்கரை இந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு உயர் கல்வி அமைச்சினதும் களனி பல்கலைக்கழகத்தினதும் நிருவாக சபையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டமை. 2007 ஆம் ஆண்டில் 02 ஏக்கர் காணியானது இந்த நிறுவனத்திற்கு உடைமைமாற்றப்படவுள்ளது.

18. முறையே வருடாவருடம் நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமையும் முக்கியமாக அந்நிய செலாவணியை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தமையும். 2016 ஆம் ஆண்டினுள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

19. சீனா, ஹொங்கொங், சிங்கப்பூர், மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து பௌத்த விடயத்துறைக்குரியதாக பரிமாறல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியமை, புதிய பாடநெறிகளை ஆரம்பித்தமை. இந்த நிறுவனத்தின் தேவைகளின் மீது பிரேரிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டால் அவற்றுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்குவதற்கும் கலந்துரையாடல்களில் வலியுறுத்தப்பட்டது. இலங்கைக்கான சீன தூதுவருடனான சந்திப்பின் போது கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளின் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்ட பணிகள் கலந்துரையாடப்பட்டன.

20. 2016-11-18 ஆம் திகதியன்று "அன்வேஷனா" இலக்கிய பருவ சஞ்சிகைகள் இரண்டு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் வெளியிடப்பட்டமை.

21. நிறுவனத்தின் நடப்பு தகவல்களை உள்ளடக்கி செய்திதாளொன்று 2016 யூன் மாதம் அச்சிடப்பட்டமை.

22. 2016-10-19 ஆம் திகதியன்று 122 வெளிநாட்டு மாணவர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமான கல்வி சுற்றுலா ஒன்று பொலன்நறுவை மற்றும் சோமாவதி வழிபாட்டுத்தளம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டமை.

23. இலங்கை கல்விமான்களின் பங்குபற்றுதலுடன் 2016-11-29 ஆம் திகதியன்று இலங்கை மன்ற நிறுவனத்தில் பிக்குமார்களுக்கான கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டமை.

## (ஆ) வெற்றிகள்

கடந்த ஐந்து வருட காலப் பகுதிக்குள் பாடநெறிகளின் எண்ணிக்கை உட்பட தேசிய மற்றும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து பௌத்த கல்வித்துறைக்குரிய பணிகளை உயர் தரத்திற்கு கொண்டுவருவதிலும் இந்த நிறுவனம் வெற்றிகண்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கிரிய நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்களில் கூடுதலான எண்ணிக்கையினருக்கு வசதிகளை வழங்கும் வெளிநாட்டு மாணவர்களின் முன்னுரிமை நிறுவனமொன்றாக இந்த நிறுவனத்தை மாற்றுதல் இந்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 2015 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை**

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 1. | 2012 | 164 | 133 |
| 2. | 2013 | 186 | 134 |
| 3. | 2014 | 285 | 128 |
| 4. | 2015 | 146 | 165 |
| 5. | 2016 | 154 | 261 |

## (இ) பின்னடைவுகளும் நியாயப்படுத்துகையும்

இந்த நிறுவனம் முப்பத்தைந்து வருடங்களுக்குக் கூடுதலான வரலாற்றுக்கு உரிமைகோரினாலும் கூட இதுவரை இதற்கு நிரந்தர காணியோ அல்லது கட்டட மொன்றையோ பெற்றுக் கொள்வதற்கு இயலாமற்போயுள்ளது. நவீன இடவசதிகளுடன் சேவையினை வழங்குவதற்கு முடியுமாயிருப்பின் மாணவர்களின் கவனத்தை மேலும் ஈர்க்கலாம். நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்தியின்பால் இந்தப் பிரச்சினை மிக பிரதிகூலமாக தாக்கத்தை செலுத்துமெனக் குறிப்பிடுதல் வேண்டும். கூடுதலான வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்கும் இந்த நிறுவனத்தில்

விடுதி வசதி இல்லாமை வெளிநாட்டு மாணவர்கள் கணிசமான அளவு இல்லாமற் போவது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) **எதிர்காலத் திட்டங்கள்**

1. இந்த நிறுவனத்திற்கு காணி மற்றும் கட்ட வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு கருத்திட்டப் பிரேரிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
2. நிறுவனத்தை சருவதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதல்.
3. புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்.

**(உ) தொழில் வாய்ப்புகள்**

களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் அநுராதபுரம் இலங்கை பிக்குமார் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த, பாளி பல்கலைக்கழகம் என்பன பாளி மற்றும் பௌத்த கல்வியை கற்பிக்கும் நிறுவனங்களாகும். இதற்கமைவாக, இலங்கையில் பாளி மற்றும் பௌத்த கல்வித் துறையில் தொழில் வாய்ப்புகள் பல நிலவுகின்றன. இந்த நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கலைமானி, தத்துவமானி மற்றும் தத்துவ முதுமானி பாடநெறிகளை பூர்த்தி செய்தவர்களின் உதவி இந்த நிறுவனங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிறுவனத்தின் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்விமான்கள் பலர் உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றி வருகின்றனர்.

ஹொங்கொங் Buddha-Dhamma Center நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர் வணக்கத்திற்குரிய பேராசிரியர் கே.எல்.தம்மசோதி தேரோ அவர்களும் உலக பல்கலைக்கழக சங்கத்தின் பதிவாளரும் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழத்தில் கற்கைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவருமான கலாநிதி கம்மாய் தம்மசாமி தேரோ அவர்களும் இந்த நிறுவனத்தின் கலாநிதி பட்டம் பெற்ற கல்விமான்களாவர். சீனா, யப்பான், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலுள்ள பெரும்பாலான உயர் கல்வி நிறுவனங்களில் இந்த நிறுவனத்தில் பாடநெறிகளை பூர்த்தி செய்ததன் பின்னர் சேவையாற்றும் பெரும்பாலானோர் உள்ளமை பற்றியும் குறிப்பிடலாம். இதைக் கொண்டு பார்க்கையில் இந்த கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைப் பூர்த்தி செய்யும் சகலருக்கும் தொழில் வாய்ப்புகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவுகின்றமை பற்றி இங்கு குறிப்பிடலாம்.

அத்துடன், பெரும்பாலான மாணவர்கள் தங்களுடைய பதவி உயர்வு கருதி பட்டப்பின் படிப்பினைக் கற்கின்றனர். ஆதலால் தொழில் பற்றிய பிரச்சினை இந்தப் பட்டதாரிகள் சம்பந்தமாக எழமாட்டாது.

## 04. முகாமைத்துவ சபை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 140 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவ சபையானது இந்த நிறுவனத்தின் நிறைவேற்று சபையாகும். இதன்

உறுப்பினர்கள் பின்வருவோர்களாவர்.

**உத்தியோகபூர்வமாக**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹூல தேரோ அவர்கள் - பணிப்பாளர் (தலைவர்).
2. திரு.பி.ஜீ.ஜயசிங்க - உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்.
3. திருமதி தரணி அனோஜா கமகே - கலாசார அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்.

**நிறுவன கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

1. வணக்கத்திற்குரிய ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.
2. வணக்கத்திற்குரிய மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த கலாசார கல்விப் பிரிவு
3. கலாநிதி (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன, தலைவர், பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.

**களனி பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. திரு.டீ.பீ.விஜேகோன்
2. மருத்துவர் (திரு) நந்த அமரசேக்கர

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. பேராசிரியர் (திரு) விமல் ஜீ.பலகல்லே
2. பேராசிரியர் (திருமதி) குசுமா கருணாரத்ன
3. பேராசிரியர் (திரு) தயா எதிரிசிங்க
4. திரு.சீ.மாலியத்த

**திறைசேரி பிரதிநிதி**

1. திரு.ஆர்.எம்.எஸ்.பி.எஸ்.பண்டார - பணிப்பாளர், அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்.

**கவனிப்பாளர்கள்**

1. திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர - சிரேட்ட உதவிப் திவாளர்
2. திருமதி.ஏ.பி.எஸ்.எம்.தொலகே - சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர்

05. **பேரவை**

1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கு அமைவாக பேரவையொன்று இருக்க வேண்டுமென்பதோடு, இது நிறுவனத்தின் கல்வி சபையாகும். இதன் உறுப்பினர்கள் பின்வருவோர்களாவர்.

**உத்தியோகபூர்வமாக**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹுல தேரோ அவர்கள் - பணிப்பாளர் (தலைவர்).
2. வணக்கத்திற்குரிய ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.
3. வணக்கத்திற்குரிய மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள் - தலைவர், பௌத்த கலாசார கல்விப் பிரிவு .
4. கலாநிதி (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன - தலைவர், பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.

**களனி பல்கலைக்கழகத்தின் பின்வரும் கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் கஹாபொல சுகதரதன தேரோ அவர்கள் - (பிரதிநிதி - களனி பல்கலைக்கழகத்தின் கலாசார கல்விப் பிரிவு)
2. வணக்கத்திற்குரிய பேராசிரியர் தராலே தம்மரதன தேரோ அவர்கள் - (களனி பல்கலைக்கழகத்தின் பாளி மற்றும் பௌத்த கல்விப் பிரிவுத் தலைவர்)

**நிறுவனத்தின் கல்விப் பிரிவுகளின் தலைவர்கள்**

1. கலாநிதி (திரு) பி.ஆர்.வசந்த பிரியதர்ஷன - பௌத்த கலாசார கல்விப் பிரிவு
2. வணக்கத்துக்குரிய கலாநிதி வடிநாகல பஞ்சாலோக்க தேரோ அவர்கள் - பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு.
3. கலாநிதி (திரு) அசோக்க வெலிதொட்ட - பௌத்த தத்துவ கல்விப் பிரிவு.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்**

1. வணக்கத்திற்குரிய பேராசிரியர் அங்கலகட சிறிசுமன தேரோ அவர்கள்
2. வணக்கத்திற்குரிய கலாநிதி மெதகம்பிட்டியே விஜிததம்ம தேரோ அவர்கள்
3. பேராசிரியர் (திரு) ரத்ன விஜேதுங்க
4. மருத்துவர் (திரு) அமரசிறி பொன்னம்பெரும
5. கலாநிதி (திரு) பிரனீத் அபயசுந்தர

**கவனிப்பாளர்கள்**

திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர - சிரேட்ட உதவிப் பதிவாளர்

**அழைப்பின்பேரில்**

திருமதி கீதானி அத்தநாயக்க - சிரேட்ட உதவி நூலகர்

## 06. நிறுவனத்தின் நிருவாக மற்றும் கற்கைக் கட்டமைப்பு

| | | |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் | வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொட்டபிட்டியே ராஹூல தேரோ அவர்கள், B.A.(Hons),M.A.,PhD |
| 02. | சிரேட்ட உதவிப் பதிவாளர் | திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர B.A. (SJP)<br>PGD (UOC)<br>Dip. in Advanced English (UOC) |
| 03. | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் | திருமதி.ஏ.பி.எஸ்.எம்.தொலகே<br>B.Sc.Business Admn(Sp) (SJP) |
| 04 | சிரேட்ட உதவி நூலகர் | திருமதி.எம்.கே.கீதானி அத்தநாயக<br>B.A.(Hons) M.A (பேராதனை)<br>MLSc.(கொழும்பு) |
| 05. | உதவிப் பதிவாளர் | செல்வி எம்.பீ.வை.ஜீ.பெரேரா (2016-10-13 ஆம் திகதியிருந்து)<br>B.Sc.Business Admn(Sp) (SJP)<br>M.A.(Econ) (களனி) |
| **கல்வி பிரிவுகளும் தலைவர்களும்** | | |
| | பௌத்த தத்துவ கல்விப் பிரிவு | வணக்கத்திற்குரிய ரலுவே பத்மசிறி தேரோ அவர்கள்<br>M.A.(National University of Shigapore) |
| | பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு | கலாநிதி (திரு) டபிள்யு.எம்.தேசப்பிரிய குணசேன<br>Doctor of Philosohphy<br>M.A.(Linguistics) (SJP)<br>Grantavisarada |
| | பௌத்த கலாசார கல்விப் பிரிவு | வணக்கத்திற்குரிய மிரிஸ்வத்தே விமலஞான தேரோ அவர்கள்<br>Mphill (University of Peradeniya) |

07. **பதவியணி தொடர்பிலான விபரங்கள் - 2016**

| கிளை | சிரேட்ட நிலை | பதவியினர் | கனிஷ்ட ஊழியர் | தொழிலாளர் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் அலுவலகம் | பணிப்பாளர் - 01 | எழுதுநர் - தரம் iii - 01 | - | - |
| கல்விப் பிரிவு - 01. பௌத்த தத்துவ கல்விப் பிரிவு 02. பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு 03. பௌத்த கலாசார கல்விப் பிரிவு | | | | |
| தாபனக் கிளை<br><br>பரீட்சைகள் மற்றும் மாணவர் பணிகள் கிளை | சிரேட்ட உதவி பதிவாளர் - 01 | சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (சுருக்கெழுத்தாளர் - சிங்களம்) - 01<br>எழுதுநர் தரம் iii - 01<br><br>கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் - தரம் iii - 02 | அலுவலக இயந்திர இயக்குநர் - 01 | அலுவலக உதவியாளர் - 01<br>தொழிலாளர் (விசேட தரம்) - 01<br><br>தொழிலாளர் தரம் iii - 01 |
| நிருவாகக் கிளை | உதவி பதிவாளர் - 01 | கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் (பயிற்சி) - 01 | சாரதி தரம் ii - 02 (இந்த பதவிகள் இரண்டில் ஒன்று வெற்றிடமாக உள்ளதோடு இது 2017-03-01 ஆம் திகதியிலிருந்து ஆட்சேர்ப்புச் செய் யப்படவுள்ளது. ) | |
| கணக்குக் கிளை | சிரேட்ட உதவி நிதிப் பொறுப் பாளர் - 01 | சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (எழுதுநர்) - 01<br>சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (கணக்குப் பதியுநர்) - 01<br>சிரேட்ட பதவிநிலை உதவியாளர் (சிறாப்பர்) - 01<br>களஞ்சியப் பொறுப்பாளர் தரம் ii - 01<br>கணனி தரவு உள்ளீர்ப்பு உதவியாளர் (பயிற்சி) - 01 | | |
| நூலகம் | சிரேட்ட உதவி நூலகர் - 01 (தரம் i) | உதவி நூலகர் தரம் iii - 02 | நூலக உதவியாளர் தரம் ii - 02 (2016-06-15 ஆம் திகதி யிலிருந்து வெற்றிடம் ஒன்று நிலவுகின்றது) | |

## 08. கணக்காய்வுக் குழு

நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.எம்.எஸ்.பி.எஸ்.பண்டார | - | பணிப்பாளர் (தலைவர்) - திறைசேரி பிரதிநிதி |
| 2. | திரு.பி.ஜீ.ஜயசிங்க - மேலதிகச் செயலாளர் | - | உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு (உயர் கல்விப் பிரிவு) |
| 3. | பேராசிரியர் (திரு) விமல் ஜீ.பலகல்லே | - | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 4. | திருமதி எஸ்.எம்.எஸ்.சமரவீர | - | உதவி உள்ளக கணக்காய்வாளர் |
| 5. | திருமதி எச்.ஏ.டீ.சாந்தனி | - | கணக்காய்வு அத்தியட்சகர் - அரசாங்க கணக்காய்வுப் பிரிவு |
| 6. | திரு.எம்.எம்.ஜே.ஆர்.போகமுவ | - | பிரதான உள்ளக கணக்காய்வாளர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |
| | | | |

### கவனிப்பாளர்கள்

திரு.எல்.ஏ.சுமித் ஜயசேக்கர - சிரேட்ட உதவிப் பதிவாளர் - செயலாளர்

திருமதி ஏ.பி.எஸ்.எம்.தொலகே - சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர்

திருமதி கீதானி அத்தநாயக்க - சிரேட்ட உதவி நூலகர்.

செல்வி.எம்.பீ.வை.ஜீ.பெரேரா - உதவி பதிவாளர்

## 09. பாடநெறிகள் பற்றிய விபரம்

நடைமுறையில் பின்வரும் பாடநெறிகளும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் நடாத்தப்பட்டு வருகின்றன.

| பாடநெறி இல. | பாடநெறியின் பெயர் | பாடநெறியின் தமிழ் பெயர் |
|---|---|---|
| 01. | Postgraduate Diploma in Buddhist Studies | பௌத்த கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 02. | Master of Arts Degree in Buddhist Studies | பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி |
| 03. | Postgraduate Diploma in Pali Studies | பாளி கல்வி பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 04. | Master of Arts Degree in Pali Studies | பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி |
| 05. | Master of Philosophy in Buddhist Studies (MPhil) | பௌத்த கல்வி தத்துவ பட்டம் |
| 06. | Doctor of Philosophy Buddhist Studies (PhD) | பௌத்த கல்வி தத்துவ முதுமானி பட்டம் |
| 07. | Postgraduate Diploma in Buddhist Ayurvedic | பௌத்த ஆயுள்வேத ஆலோசனை |

| | | |
|---|---|---|
| | Counseling | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி |
| 08. | Master of Arts Degree Course in Buddhist Ayurvedic Counseling | பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி |
| 09. | Basic Pali & Sanskrit Course<br>To be commenced in 2017 | |
| 10. | English Through Buddhism | |

**10. மாணவர் விபரம் - 2016**

**சிங்கள மொழிமூலம்**

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் | சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 13 | 11 | 11 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 91 | 75 | 68 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 04 | 04 | 04 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 26 | 22 | 22 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி | 47 | 43 | 42 |

**ஆங்கில மொழிமூலம்**

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் | சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | 26 | 24 | 23 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | 264 | 252 | 221 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கப்பூர்) | 10 | 10 | 10 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி (சிங்கப்பூர்) | 03 | 02 | 02 |
| பௌத்த கல்வி முதுமானி பட்டப் பாடநெறி (ஹொங்கொங்) | 43 | 21 | 12 |

**ஆராய்ச்சிப் பட்டத்தினைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை**

| பட்டம் | சிங்கள மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
|---|---|---|
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (MPhil.) | 64 | 71 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (PhD) | 14 | 34 |

11. பாடநெறிகளும் மாணவர்களின் எண்ணிக்கையும்

படம்

12. சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை

| | வருடம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 01. | 2012 | 164 | 133 |
| 02. | 2013 | 186 | 134 |
| 03. | 2014 | 285 | 128 |
| 04. | 2015 | 146 | 165 |
| 05. | 2016 | 154 | 261 |

படம்

13. வள மற்றும் மாணவர் எண்ணிக்கை - 2016

| பாடநெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கல்விசார் பதவியினர் |
|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 13 | பணிப்பாளர்<br>பேராசிரியர் - 04<br>சிரேட்ட விரிவுரையாளர் - 02<br>சிரேட்ட உதவி நூலகர்<br>விஞ்ஞான உதவியாளர் - 01<br>வெளிவாரி விரிவுரையாளர்கள் |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 26 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 91 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 264 | |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 04 | |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 26 | |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 47 | |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 64 | |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 71 | |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (சிங்கள மொழிமூலம்) | 14 | |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி (ஆங்கில மொழிமூலம்) | 34 | |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி - வெளிவாரி (ஆங்கில மொழிமூலம்) | 46 | |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி - வெளிவாரி(ஆங்கில மொழிமூலம்) | 10 | |

## 14. பாடநெறிகளை பூர்த்திசெய்த உள்நாட்டு மாணவர்கள் - 2016

| பாடநெறி | மொழிமூலம் | பரீட்சைக்குத் தோற்றியோர் (2015) | பரீட்சைக்குத் தோற்றியோர் (2016) |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 08 | 11 |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | ஆங்கிலம் | 04 | 02 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 56 | 75 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | 07 | 09 |
| பாளி கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | சிங்களம் | 04 | 04 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | சிங்களம் | 44 | 22 |
| பௌத்த ஆயுள்வேத ஆலோசனை முதுமானி பட்டப் பாடநெறி | சிங்களம் | 49 | 43 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | சிங்களம் | 01 | 01 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | ஆங்கிலம் | - | - |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | சிங்களம் | 03 | 06 |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | ஆங்கிலம் | 06 | 06 |

## 15. பாடநெறிகளை பூர்த்திசெய்த வெளிநாட்டு மாணவர்கள் - 2016

| பாடநெறி | மொழிமூலம் | பரீட்சைக்குத் தோற்றியோர் (2015) | பரீட்சைக்குத் தோற்றியோர் (2016) |
|---|---|---|---|
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி | ஆங்கிலம் | 20 | 22 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி | ஆங்கிலம் | 165 | 212 |
| பௌத்த கல்வித் தத்துவ பாடநெறி | ஆங்கிலம் | - | - |
| பௌத்த கல்வித் தத்துவ முதுமானி பாடநெறி | ஆங்கிலம் | 05 | - |
| பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறி - வெளிவாரி | ஆங்கிலம் | 07 | 10 |
| பௌத்த கல்வி கலை முதுமானிப் பட்டப் பாடநெறி - வெளிவாரி | ஆங்கிலம் | 24 | 23 |
| | | **216** | **267** |

## 16. பரிசு வழங்கல்

| விடயம் | பரிசுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்டவர் |
|---|---|---|
| (அ) உள்நாட்டு / வெளிநாட்டு பரிசு பெறுவோர் | 01 | "சுவர்ண முத்திரிக்காவ" (பௌத்த கல்வி கலை முதுமானி - சிங்களம்) (பாடநெறியில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்) திருமதி தோன சிந்தா ரண்சிறினி பிரேமரத்ன |
| | 01 | "ரஜத்த முத்திரிக்காவ" (பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (சிங்களம்) - (பாடநெறியில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்) திரு.ஏக்கநாயக்க முதியன்சேலாகே சமந்தகுமார செனெவிரத்ன |
| (ஆ) ஈ.டபிள்யு.குணதிலக்க புலமைபரிசில் நிதியம் | 01 | திரு.ஏக்கநாயக்க முதியன்சேலாகே சமந்தகுமார செனெவிரத்ன |
| (இ) மஹாயானா கற்கையில் புலமை காட்டும் மாணவர்களுக்கு வழங்கும் புலமைபரிசில் | 02 | 1.வணக்கத்திற்குரிய அலுயட்டவல விமலதம்ம தேரோ<br>2. வணக்கத்திற்குரிய கேமசிறி |

## 17. கல்விசார் பதவியினர் - 2016

| திணைக்களம் | மொழி மூலம் | சிரேட்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேட்ட விரிவுரை யாளர் | விரிவுரை யாளர் | விஞ்ஞான உதவியாளர் தரம் ii |
|---|---|---|---|---|---|---|
| பௌத்த தத்துவக் கல்விப் பிரிவு | | - | 01 | 01 | - | - |
| பௌத்த கலாசார கல்விப் பிரிவு | | - | 02 | - | - | - |
| பௌத்த மூலதத்துவ கல்விப் பிரிவு | | - | 01 | 01 | - | - |
| ஆராய்ச்சிப் பிரிவு | | - | - | - | - | 01 |



18. **2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆராய்ச்சிப் பட்டம்**

| பெயர் | பட்டம் | ஆராய்ச்சிப் பட்டத்திற்கான தலையங்கம் | அபேட்சகரின் நாடு |
|---|---|---|---|
| செல்வி நயணா குமாரி ஆரியரத்ன | தத்துவமானி (சிங்களம்) | A Comparative Analysis on Paramartha Buddhist Concept in ancient Buddhism and Post Buddhist Philosophies | இலங்கை |
| திருமதி.ஜி.டபிள்யு. நிசன்சலா மதுஹன்சி | தத்துவமானி (சிங்களம்) | A Comparative Analysis - Buddhist and modern concepts on Human Development | இலங்கை |
| திருமதி.மியுரி மல்லிகா தலுவத்த | தத்துவமானி (சிங்களம்) | A Critical Study on the operation of Dharmika concept in Sri Lankan history (based on Anuradhapura and Polonnaruwa era) | இலங்கை |
| திரு.என்.பீ.டி.என்.பீ. பலல்ல | தத்துவமானி (சிங்களம்) | The manner in which the Pointed Responsibility is described, which goesaway from the Roman-Dutch Law of Delicts | இலங்கை |
| திரு.டி.என்.டபிள்யு.ஜி. ஓபாத்த | தத்துவமானி (சிங்களம்) | An Analytical Study on the Buddhist Cultural Ethics which affected to the Political Usage in Sri Lanka | இலங்கை |
| திருமதி.ஏ.வி.மாலனி | தத்துவமானி (சிங்களம்) | ...............அறிவு முகாமைத்துவம் பற்றிய விரிவான கற்கை | இலங்கை |
| Mrs.Soma Subhashini De Silva | தத்துவமானி (ஆங்கிலம்) | Counseling for Interpersonal Conflict : A Psychological Model Based on Buddhist Principles | இலங்கை |
| Ven Pang Yahui | தத்துவமானி (ஆங்கிலம்) | A critical Study of the Multicultural Elements in Buddhist Social Philosophy and Ethics | சீனா |
| Ven.Li Xia | தத்துவமானி (ஆங்கிலம்) | A critical Study of the Psychological Importance of the Theravadha Analysis of mind with reference to the Early Buddhism | சீனா |
| Ven.Da Xing | தத்துவமானி (ஆங்கிலம்) | A comparative Study of the Buddhist Noble Eightfold path and the Astanga - Yoga in Yoga system | சீனா |
| Ven.AshinIndaka | தத்துவமானி (ஆங்கிலம்) | A critical Study of the Development of Early Buddhist Psychological Concepts in the Pali Commentarial Literature | மியன்மார் |
| Ven Anula | தத்துவமானி (ஆங்கிலம்) | The Relevance of the Analysis of five Aggregates in Buddhist Meditation - A Critical Study | கொரியா |
| வணக்கத்துக்குரிய அக்கிரியே சூலாலங்கார தோரோ | தத்துவ முதுமானி (சிங்களம்) | An Analytical Study on Vaipulya Sutra representing a intermedairy stage of Buddhism converting to Mahayana | இலங்கை |

## 19. வெளியீடுகள்

வருடாந்த வெளியீடுகளாக பிரசுரிக்கப்படும் "அன்வேஷன" கலாசார சஞ்சிகை 2015 ஆம் ஆண்டிலும் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இரு பதிப்புகளாக பிரசுரிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக செய்திக் கடிதமும் (News Letter) வெளியிடப்பட்டது.

## 20. நூலகம்

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் செயற்பணியானது பௌத்த பட்டப்பின் படிப்பு சார்பில் ஏற்ற வாய்ப்புகளை உருவாக்குதல் அவற்றுக்கு ஒத்தாசை நல்குதல் பௌத்த கல்வியின்பால் நற்பெயரை உருவாக்குதல் பௌத்த கல்வித்துறையில் ஆராய்ச்சி தேர்ச்சியினை விருத்தி செய்தல் என்பனவாகும். இந்த செயற்பணியை வெற்றி கொள்வதில் பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் நூலகம் முக்கிய பணியினை நிறைவேற்றுகின்றது. இதற்கமைவாக, நிறுவனத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடும் கல்வியாளர்களுக்கும் கல்விசார் பதவியணியினருக்கும் தேவையான ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை தகவல் மூல வளங்களையும் பிற உரிய வசதிகளையும் வழங்குவது நூலகத்தின் பிரதான பொறுப்பாகம். இதற்கு மேலதிகமாக வெளிவாரி நூலக உறுப்பினர்களின் கீழ் உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான ஆய்வு வசதிகளையும் நூலகத்தின் ஊடாக வழங்கப்படுகின்றது.

தற்போது பௌத்த கல்வித்துறையில் அரிய வகை நூல்கள் அடங்கலாக பெறுமதி மிக்க சுமார் 20,000 நூல்கள் உள்ள முன்னுரிமை நூலகமொன்றாவதோடு, இங்கு 90 சதவீதம் பௌத்த நூல்கள் உள்ளமை விசேட அம்சமாமகும். அதேபோன்று பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுககும் பௌத்த ஆராய்ச்சிகளுக்கும் அமைவாக நூலகத்திற்குத் தேவையான நூல்கள் திரட்டப்படுகின்றன.

தற்போது இந்த நிறுவனத்தின் நூலகத்திற்குச் சொந்தமான சுமார் 22,000 நூல்கள் உள்ளன. இவற்றுல் 90 சதவீதமானவை பௌத்த நூல்களாக காணக்கூடியதாகவுள்ளமை விசேட அம்சமாகும். பட்டப்பின்படிப்பு பாடநெறிகளுக்கும் பௌத்த ஆராய்ச்சித் தலையங்கங்களுக்கும் அமைவாக நூலகத்திற்கான நூல்கள் திரட்டப்படுகின்றன.

இதனால் பௌத்த மதம் அதன் பிரிவுகளின்பாலும் பாளி மொழி, பாளி வரலாறு, பௌத்த நுண்கலை, பௌத்த தத்துவம் போன்ற விடயங்களின்பால் கூடிய கவனம் செலுத்தி நூல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பௌத்த மதம் சார்ந்த புதிய கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் போன்ற ஆய்வு நூல்களும் பயன்படுத்துவதற்காக உள்ளன.

அதேபோன்று ஏழு மொழிமூலங்களில் (பாளி, சிங்களம், ஆங்கிலம், பர்மா, கம்போதியா, தேவநாகிரி, தாய்) அச்சிடப்பட்ட தேரவாத திரிபீடகம் உட்பட சீன மதம் தொடர்பிலான தைஷோ வெளியீடும் உள்ளன.

ஆராய்ச்சி பட்டதாரிகளினால் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தத்துவ மற்றும் தத்துவ முதுமானி பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சி கட்டுரை திரட்டொன்று நூலகத்தில் உள்ளது.

## நூலக சேவைகள்

**வாசகர்களுக்காக பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன:**

ஆய்வு சேவை
நூல்கள் வழங்கும் சேவை
பிரதியெடுத்தல் சேவை
இணைய சேவை
கணனிப் பாவனை மற்றும் அச்சுப் பிரதிகளை வழங்கும் சேவை
சருவதேச நூலக சேவை
பட்ட படிப்பிற்கான ஆய்வு கட்டுரைகள் புத்தகம் கட்டும் சேவை

**நூலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை**

வெளிவாரி வாசகர்களுக்கு ஆய்வு செய்யும் வசதிகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதோடு, ஏனையோர் சார்பில் ஆய்வு மற்றும் புத்தகங்களை கொண்டு செல்லும் வசதிகள் வழங்கப்டப்பட்டுள்ளன. இதற்கமைவாக பின்வருமாறு நூலக உறுப்புரிமை 2016 ஆம் ஆண்டு சார்பில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| போதனாசிரியர்கள் | - 07 |
| கல்விசார பதவியணியினர் | - 20 |
| பட்டப்பின் படிப்பு அபேட்சகர்கள் | - 466 |
| வெளிவாரி வாசகர்கள் | - 38 |
| **மொத்தம்** | - 531 |

**பதவியணி கட்டமைப்பு**

பின்வரும் பதவியணியினர் மேற்போந்த வாசகர்களுக்கான சகல சேவைகளையும் வழங்குகின்றனர்.

| | |
|---|---|
| சிரேட்ட உதவி நூலகப் பொறுப்பாளர் | - 01 |
| உதவி நூலகர் | - 01 |
| நூலக உதவியாளர் | - 02 |
| மொத்தம் | - 04 |

**2016 ஆம் ஆண்டில் நூல்கள் கொள்வனவு செய்தலும் நன்கொடையாக கிடைத்தவையும்**

நிறுவனத்தின் வருடாந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களும் நன்கொடையாக கிடைத்த நூல்களும் பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் எண்ணிக்கை | - 907 |
| நன்கொடையாக கிடைத்த நூல்களின் எண்ணிக்கை | - 813 |
| மொத்தம் | - 1720 |

**21. ஆராய்ச்சிப் பிரிவு**

**வணக்கத்திற்குரிய மடிஹே சுகத்தசிறி தேரோ - விஞ்ஞான உதவியாளர்**

தத்துவமானி மற்றும் கலாநிதி பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பற்றிய மதிப்பீட்டாளர்களினால் பிரேரிக்கப்பட்ட திருத்தங்கள் அபேட்சகர்களினால் சரியாக செய்யப்பட்டுள்ளதாவென பரிசீலனை செய்து அறிக்கையிடுவதற்கும் ஆராய்ச்சி கற்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் சார்பில் விசேட விரிவுரைகளை ஒழுங்கு செய்தல் அதேபோன்று பொது ஆராய்ச்சி மாணவர்களுக்கு அவர்களுடைய ஆராய்ச்சிப் பணிகளை நடாத்திச் செல்வதற்கு வழிகாட்டுதலும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**22. கல்வி சுற்றுலா**

2016 ஒக்ரோபர் மாதம் 19 மற்றும் 20 ஆகிய இரண்டு தினங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவானது பொலன்நறுவை வரலாற்று நகரம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் சார்பில் சுமார் 130 பேர்கள் கலந்துகொண்டதோடு, வகுப்பறை அறிவினை செய்முறை செயற்பாடுகளாக வெளிக்கள ஆய்வு வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. கல்விசார் பதவியணியினரும் வெளிவாரி கல்விமான்களும் வளவாளர்களாக செயற்பட்டதோடு, மாணவர்கள் எதிர்பார்த்த பெறுபேற்றினை அடையும் விதத்தில் கல்விச் சுற்றுலாவானது வெற்றிகரமாக இரண்டு நாட்கள் நடாத்தப்பட்டது.

**23. மாநாடு**

பிக்குமார்களின் ஒழுக்கநெறிகள், கலந்துரையாடல், நவீன சவால்கள் என்னும் தலைப்பில் தேசிய மாநாடொன்று 2016-11-29 ஆம் திகதியன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

துறைசார்ந்த நிபுணர்கள் பலரின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது நான்கு செயலமர்வுகளாக ஒருநாள் முழுவதும் நடாத்தப்பட்டது. முதலாவது நிகழ்ச்சித்திட்டத்தின் அடுத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதோடு, இரண்டாவது நிகழ்ச்சித்திட்டமானது 2017 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**24. மீண்டுவரும் செலவினம்** -

| விடயம் | 2015<br>ரூ.ச | 2016<br>ரூ.ச | வித்தியாசம் |
|---|---|---|---|
| (அ) சம்பளங்களும் ஊதியங்களும் | 32,457,600 | 40,629,392 | 8,171,792 |
| (ஆ) பிரயாணச் செலவுகள் | 159,458 | 1,184,729 | ,1,025,291 |
| (இ) வழங்கல் | 1,474,586 | 1,280,809 | ,-193,777 |
| (ஈ) பராமரிப்பு | 888,180 | 1,138,048 | 249,868 |
| (உ) ஒப்பந்த சேவைகள் | 13,407,246 | 15,123,678 | 1,716,432 |
| (ஊ) பிற | 15,887,083 | 27,903,405 | 12,016,322 |
| **மொத்தம்** | **64,274,133** | **87,260,061** | **22,985,9828** |

## 25. மூலதனச் செலவினம்

| விடயம் | 2015 ரூ.ச | 2016 ரூ.ச | வித்தியாசம் |
|---|---|---|---|
| (அ) தளபாடங்களும் அலுவலக உப கரணங்களும் கொள்வனவு செய்தல் | 3,829,292 | 1,167,683 | -2,661,609 |
| (ஆ) இயந்திர சாதனங்கள் கொள்வனவு செய்தல் | 0 | 0 | 0 |
| (இ) கட்டடங்கள் | 0 | 0 | 0 |
| (ஈ) பிற | 691,431 | 1,118,489 | 427,058 |
| **மொத்தம்** | **4,520,723** | **2,286,172** | **-2,234,551** |

## 26. நிதிசார் முன்னேற்றம் (செலவு)

| | விடயம் | வரவுசெலவுத்திட்ட ஒதுக்குகை ரூ.ச | | செலவு ரூ.ச | | சேமிப்பு/ குறைபாடு ரூ.ச | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| (அ) | மீண்டுவரும் (கருத்திட்டங்கள் தவிர) | 60,526,200 | 57,200,000 | 55,448,860 | 70,327,036 | 5,077,340 | -13,127,036 |
| (ஆ) | மூலதனம் (கருத்திட்டங்கள் தவிர) | 2,750,000 | 2,750,000 | 4,520,723 | 2,286,172 | -1,770,723 | 463,828 |
| (இ) | கருத்திட்டங்கள் - உள்நாட்டு முதலீடு | 6,200,000 | 12,800,000 | 8,825,274 | 16,933,025 | -2,625,274 | -4,133,025 |
| (ஈ) | கருத்திட்டங்கள் - வெளிநாட்டு முதலீடு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | **மொத்தம்** | **69,476,200** | **72,750,000** | **68,794,857** | **89,546,233** | **681,343** | **-16,796,233** |

## 27. நிதிசார் முன்னேற்ற விபரம் (ஈட்டப்பட்ட வருமானம்)

| | வருமான வழி | ஒதுக்குகை ரூ.ச | | மொத்தம் வருமானம் ரூ.ச | | ஒதுக்குகை ரூ.ச | மொத்தம் வருமானம் ரூ.ச |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| (அ) | பட்ட அபேட்சகர்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0, |
| (ஆ) | பட்டப்பின் படிப்பு | 31,070,000 | 57,200,000 | 25,789,893 | 36,830,886 | 5,280,107 | 20,369,114 |
| (இ) | மதியுரைச் சேவை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| (ஈ) | பிற | 6,160,000 | 12,800,000 | 14,134,102 | 19,156,064 | -7,974,102 | -6,356,064 |
| | **மொத்தம்** | **37,230,000** | **70,000,000** | **39,923,995** | **55,986,950** | **-2,693,995** | **14,013,050** |

## 28. நிதிசார் முன்னேற்ற ஆய்வு - 2016

| | விடயம் | திட்டம் | மாணவர் ஒருவருக்கான செலவு | |
|---|---|---|---|---|
| | | | 2015 | 2016 |
| (அ) | மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவினம் | மீண்டுவரும் செலவினம் - மாணவர்களின் எண்ணிக்கை | 92,348 | 110,456 |
| (ஆ) | மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவினம் | மூலதனச் செல வினம் - மாணவர்களின் எண்ணிக்கை | 6,477 | 2,894 |
| மொத்தம் | | | **98,825** | **113,350** |

## 29. அறிக்கைக்குரிய பிற தகவல்கள்

01. இறுதிக் கணக்குகள் - 2016

02. 2012 - 2016 வரையிலான நிறுவனத்தின் நிதிநிலைமை

03. களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமான பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும் பதிலும்.

## 30. 2012 - 2016 வரை நிறுவனத்தின் நிதி நிலைமை

| வருடம் | அரசாங்க உதவி மீண்டுவரும் | 102- அரசாங்க உதவி மூலதனம் | தகவல் தொழினுட்பத் திற்கான அரசாங்கத்தின் உதவி | நிறுவனத்தின் ஈட்டுகை | மொத்த மீண்டுவரும் வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | மீண்டுவரும் நிதி பணிகளின் பெறுபேறு |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 6,500,000 | 1,600,000 | - | 25,864,163 | 32,364,163 | 35,074,132 | -2,709,969 |
| 2013 | 11,417,000 | 2,550,000 | - | 26,474,565 | 37,891,565 | 41,359,197 | -3,467,632 |
| 2014 | 24,150,000 | 2,000,000 | - | 30,109,778 | 54,259,778 | 55,041,448 | (781,671) |
| 2015 | 12,000,000 | 2,750,000 | - | 45,303,098 | 57,292,098 | 64,274,134 | (6,982,036) |
| 2016 | 23,400,000 | 6,400,000 | - | 61,874,729 | 85,274,729 | 87,260,061 | (1,985,332) |

## 2016 ஆம் ஆண்டின் நிதி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை
### பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம் - களனி பல்கலைக்கழகம்

### அறிக்கையிடும் நிறுவனம்

களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமொன்றான பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க பாளி, பௌத்த கல்வி கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் சார்பில் 37 நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுள்ளன.

2016 ஆம் ஆண்டில் கிடைத்த கொடைகளின் அளவு பின்வருமாறாகும்.

| | | | |
|---|---|---|---|
| மீண்டுவரும் ஒதுக்கீடு | | - | ரூபா 23,400,000.00 |
| மூலதனக் ஒதுக்கீடு | 102 | - | ரூபா 6,400,000.00 |

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம்.

**களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2017 ஏப்ரல் 20 ஆம் திகதி வழங்கப்பட்டது.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.



எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியத்தினால் மானியங்களுக்கான காலக்கழிவினை செய்வதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் போது நிறுவனத்திற்கு மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 284,016 பெறுமதியான புத்தகங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதியம் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்புக்களின் பெறுமதி ரூபா 534,370 ஆக இருந்ததுடன் அத்திகதியில் களஞ்சிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 420,520 ஆக இருந்தமையால் ஆண்டின் இறுதியில் இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகைகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் இருப்புப் பெறுமதி மற்றும் பௌதீக இருப்பு பெறுமதி என்பவற்றிற்கிடையே ரூபா 113,272 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது நட்டமொன்றாகப் பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 60,062 கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் வட்டி வருமானம் என்பன அப்பெறுமதியால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் பேணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 36,040,387 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 39,700,003 ஆக இருந்தமையால் மொத்தச் நிலையான சொத்துக்களில் ரூபா 3,659,616 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் சஞ்சிகைகளின் பெறுமதி ரூபா 1,118,489 ஆக இருந்த போதிலும், நூலகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,265,973 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 147,484 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் பற்றாக்குறை ரூபா 1,985,332 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,971,036 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 4,985,704 இனால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின்



செலவினம் ரூபா 22,997,327 ஆல் அதிகரித்திருந்த போதிலும், அரசின் மானியங்கள் ரூபா 11,400,000 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 5,771,331 ஆலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட பற்றாக்குறையின் வீழ்ச்சி தொடர்பில் விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

கடந்த 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியான பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதும், ஊழியர் ஊதியம் மற்றும் ஏனைய சீராக்கங்களின் பின்னர் பெறுமதி சேர் அதிகரிப்பு அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது அரசின் மானியங்கள் 11 மில்லியனால் அதிகரித்தமை காரணமாக பற்றாக்குறை 71 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்த போதிலும், அதற்கு ஒப்பாக பெறுமதி சேர்க்கப்பட்ட பெறுமதி 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்து பாளி மற்றும் பௌத்த விடயத் துறைகள் தொடர்பான பட்டப்பின்படிப்பினை தரமாக கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல், பட்டப்பின் பட்டங்கள், டிப்ளோமா சான்றிதழ், சான்றிதழ் பத்திரம் மற்றும் ஏனைய கலைத்திறன்களை மதிப்பிடல் மற்றும் வழங்குவதற்கு தகைமை பெற்ற நபர்களை பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்தல் மற்றும் பதவியை ஏற்படுத்துதல், இடைநிறுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை செய்தல் என்பன நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.
நிறுவகத்தின் இந்நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) கல்விசார் செயலாற்றல்

நிறுவகத்தின் 2016 பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 527 ஆக இருந்ததுடன், அதில் 464 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். முன்னைய ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 443 ஆக இருந்ததுடன், 390 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். முன்னைய ஆண்டில் 314 பேர் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன், அதாவது 80 சதவீதமாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 419 ஆக அதாவது 79 சதவீதமாக இருந்தது.

(ஆ) ஆராய்ச்சி மானியங்கள்

பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளை வெளியிடுவதன் மூலம் பல்கலைக்கழகத்தை உயர் நிலைக்கும் தரமான நிலைக்கும் கொண்டு வருவதன் மூலம் ஆராய்ச்சி முடிவினை பொருளாதார அபிவிருத்தியை நோக்கி பயன்படுத்துவதன் மூலம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அதற்காக ஆராய்ச்சி மானியங்களாக திறைசேரியிடமிருந்து ரூபா 1,000,000 வழங்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிப் படிகளைப் பெற்றுக்கொள்ளும் பத்து உத்தியோகத்தர்களுக்கு நிறுவகத்தில் காணப்படும் போது ஒரு விரிவுரையாளருக்கு மாத்திரம் ரூபா 380,000 தொகையான ஆராய்ச்சி மானியமொன்றை ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக கிடைக்கப் பெற்றிருந்த பணத்தில் 20 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஆராய்ச்சிக்கான ஈடுபாட்டில் குறைவொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மூலதன மானியங்கள்

கல்வித்துறைகளில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், அதன் நடவடிக்கைகளை செயற்தினாகவும் வினைத்திறனாவும் நிறைவேற்றும் நோக்கில் அரசின் மூலம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டுகளில் கிடைத்த மூலதன மானியங்களில் ஆண்டின் ஆரம்பம் வரை ரூபா 502,938 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது ரூபா 6,202,115 தொகையில் ரூபா 2,920,832 மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிதிஏற்பாட்டில் 48 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்படாத மூலதன மானியங்களின் மீதி ரூபா 3,784,221 ஆக இருந்தது. இம்மானியம் அலுவலகம், கற்றல் உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பவற்றைக் கையேற்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பணத்தை அதற்காக பயன்படுத்தாமை நிறுவகத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளிப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.



(ஈ) உழைக்கப்படும் வருமானத்தைப் பயன்படுத்தல்

பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் உழைத்த மொத்த வருமானத்திலிருந்து ஆயுர்வேத பாடநெறிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ரூபா 137,452 தொகை கடந்த 04 ஆண்டுகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 67,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 204,452 மீதியொன்று காணப்பட்டது. அவ்வாறே 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நீண்டகால பாடநெறிகளுக்காக சேகரிக்கப்பட்ட ரூபா 3,488,586 வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு ரூபா 878,624 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 2,609,962 ஆன மீதியொன்று சேமிப்பாக காணப்பட்டது. இப்பணத்தை நிறுவகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) நூலக நிர்வாகம்

நூலக பயன்பாட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் காணாமல் போயிருந்த 693 புத்தகங்களில் ரூபா 30,725 பெறுமதியான 156 புத்தகங்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் வரையான காலப்பகுதிக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

(ஊ) இந்த நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 38 வருட காலம் வாடகைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது கட்டிட வாடகையான மாதமொன்றுக்கு ரூபா 764,583 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 9,174,996 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிறுவகத்திற்கு காணியொன்றைக் கொள்வனவு செய்து கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பிரதான செயற்பாடொன்றாக காண்பித்து அதற்காக ரூபா 500,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் திறைசேரியிடமிருந்து அதற்காக நிதிஏற்பாடு கிடைக்காதிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கத்தைப் பரீட்சித்த போது 06 மாத காலம் கடந்த ரூபா 109,389 தொகை இனங்காணப்படாத வருமானமாக அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது மாணவர் செயலாற்றலின் கீழ் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 16 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் 04 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே இரண்டு புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தினால் புதிய பாடநெறிகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் எதிர்வுகூறப்பட்ட வருமானங்களையும் உள்ளபடியான வருமானங்களையும் கருத்திற் கொள்ளும் போது வருமானம் ரூபா 14,967,643 ஆல் அதிகரித்திருந்ததுடன், அதற்காக விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் பாடநெறி வருமானம் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தன. அவ்வாறே 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும், உள்ளபடியான செலவினங்களையும் பரீட்சித்த போது செயற்பாட்டுச் செலவினம் கூடுதலாக எதிர்வுகூறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.



| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகை ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்படாமை. |
| (ஆ) பாதிட்டுக் கட்டுப்பாடு | தேவைப்பாட்டை மிகைத்து செலவினங்கள் எதிர்வுகூறப்பட்டிருந்தன. |
| (இ) நூலக நிர்வாகம் | நூலகப் புத்தகங்களை மீள ஒப்படைத்தல், புத்தக கணிப்பீடு, புத்தகங்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தல், புத்தகங்கள் காணாமல் போதல் |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்,
இலக்கம் 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

ஐயா,

**களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்பலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

மேற்போந்த விடயம் சம்பந்தமாக கணக்காய்வாளர் அதிபதியினால் அனுப்பப்பட்டிருந்த 2017-06-06 ஆம் திகதியிடப்பட்டதும் எச்ஈடீ/ஈ/பிஜபிபீஎஸ்/1/16/05 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான கடிதத்திற்கு அமைவாக உரிய பதில்கள் கணக்காய்வு குழுவின் தழுவு அங்கீகாரத்திற்கு உட்பட்டு, 2017-07-06 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபையினால் கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமை பற்றி அறியத்தருகின்றேன்.

## 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

2017 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) 2005 ஆம் ஆண்டிலிருந்து நிலவிய களஞ்சிய கையிருப்பு மற்றும் நிதிக் கூற்று என்பவற்றுக்கு அமைவாக நிலுவைகளுக்கு இடையிலான மாற்றங்கள் இனங்காணப்பட்டதன் பின்னர், 2016 ஆம் ஆண்டில் உரிய சீராக்கல்களைச் செய்வதற்கு அங்கீகராம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அறிக்கையொன்று 2016-12-10 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 45 ஆவது கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இறுதி கணக்கில் சீர்செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்போது 2016 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிக்கும் போது வித்தியாசத்திற்கு காரணமாய் அமைந்த குறிப்பொன்றையும் பதிவழிப்பு செய்யப்பட வேண்டிய 42,000/- ரூபாவைக் கொண்ட நிலுவையையும் சீராக்குவதற்கு முடியாமற் போயுள்ளது. 2017 ஆம் ஆண்டில் உரிய குறிப்பினை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்க்கப்பட்டது.

(ஆ) இதன் சார்பில் ஏற்கனவே ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2017 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கல்களைச் செய்வதற்கு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

(இ) தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான வைப்புகளுக்கான நிலுவையினை உறுதிப்படுத்தும் அறிவித்தல் (Renewal Notice) இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பம் வரை உரிய நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருக்கவில்லை. அதன் பிரதியொன்று குறித்த

நிறுவனத்திடமிருந்து எழுத்துமூலம் கோரப்பட்டுள்ளதோடு, 2016-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவையை உறுதிப்படுத்திய கடிதத்திலுள்ள பெறுமதி சார்பில் இறுதிக் கணக்குகளில் குறிப்பொன்று இடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் செம்மையாக முதலீட்டுக் கணக்குகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 2.2.3 விளக்கம் அளிக்கப்படாத வேறுபாடுகள்

**(அ)**

1. நிலையான சொத்துக்கள் அட்டவணைக்கும் நிதிக் கூற்றுக்கும் இடையில் 2015-12-31 ஆம் திகதியன்று நிலவிய மாற்றத்திற்காக கண்டுபிடிக்கப்பட்ட காரணங்கள் 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட 44 ஆவது கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2. 2015 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஏழு (07) வருடங்கள் மாற்றத்திற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, சமர்ப்பிக்கப் பட்டிருந்த விடயங்களை பரிசீலனை செய்த 44 ஆவது கணக்காய்வுக் குழு, உயர் கல்வி அமைச்சு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து இது சம்பந்தமான தீர்மானமொன்றை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. (44 ஆவது கணக்காய்வுக் குழுவின் தீர்மானம் இணைக்கப்பட்டுள்ளது) - இணைப்பு இலக்கம் - 01.

3. இதற்கமைவாக, 2016-02-13 ஆம் திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேட்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் தலைமையிலான குழுவின் அறிக்கையானது 2017-02-27 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. (உரிய அறிக்கையின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது) - இணைப்பு இலக்கம் - 01.
4. அறிக்கையில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக அரசாங்க கணக்காய்வு பிரிவினால் பரிசீலனை செய்து எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகளை தீர்மானிப்பதற்கு 47 ஆவது கணக்காய்வுக் குழு ஆலோசனை வழங்கியுள்ளதோடு, இதற்கமைவாக 2017 ஆம் ஆண்டில் மேற்போந்த மாற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அரசாங்க கணக்காய்வுத்துறை எமக்கு அறிவித்துள்ளது.

குழுவின் அறிக்கையும் 47 ஆவது கணக்காய்வு குழுவின் தீர்மானமும் இணைக்கப்பட்டுள்ளது. - இணைப்பு இலக்கம் 01

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) கல்விசார் செயலாற்றல்

நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட விகிதாசாரத்திற்கு அமைவாக

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, பரீட்சையில் சித்தியடைந்த விகிதாசாரமும் நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நூற்றுவீதத்தை காட்டியுள்ளது.

(ஆ) ஆராய்ச்சி மானியங்கள்

இந்த ஆராய்ச்சி மானியங்களின் முன்னேற்றம் 2016-12-31 ஆம் திகதியன்றுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது ஒரு (01) வருட கால கருத்திட்டமொன்றாகையினால் 2017 யூன் மாதம் இது பூர்த்தி செய்யப்படவுள்ளது.

(இ) மூலதன மானியங்கள்

2016-12-31 ஆம் திகதியன்றுக்கு செலவு செய்யப்படாத மூலதனத் தொகை 3,784,220/- ரூபாவாகும். இதில் 1,800,000/- ரூபா நிதி நிறுவனத்திற்கு 2016-12-20 ஆம் திகதியன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் உரிய நோக்கங்களுக்காக பின்வருமாறு பயன்படுத்தப்பட்டுள்ளது. (1. அலுவலக உபகரணங்கள் - ரூபா 2,284,444.65, 2. நூலக புத்தகங்கள் - ரூபா 254,547.10)

* குறுகிய கால முதலீடுகளுக்காக திறைசேரிக்கு அனுப்பப்படாத திம்பிரிகஸ்ஸாய நடைமுறைக் கணக்கில் உள்ள நிறுவனத்தினால் மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொகை ஆண்டு முழுவதிலும் நிறுவனத்தின் மீண்டுவரும் செலவினங்களை ஏற்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. நடைமுறைக் கணக்கிலிருந்து வட்டித் தொகை கிடைக்காமையினால் இவ்வாறு முதலீடு செய்வது மேலும் வருமானத்தை ஈட்டுவதற்காகவென குறிப்பிடுகின்றேன். அத்துடன் இது 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காய்வு ஆலோசனைகளின் மீது செய்யப்பட்டவொன்றாகும்.

(ஈ) உழைக்கப்படும் வருமானத்தைப் பயன்படுத்துதல்

ஆயுர்வேத பாடநெறிக்கான நிதி 2017 ஆம் ஆண்டில் தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறிக்கான (வெளிநாடு) நிதி ஆண்டின் இறுதி சில மாதங்களினுள் கிடைக்கப் பெறுவதினால் உரிய ஆண்டிலேயே செலவு செய்வது கடினமானதாகும். இதில் 1,475,000/- ரூபாவைக் கொண்ட தொகையானது 2017 ஆம் ஆண்டுக்கான முதலாவது காலாண்டில் செலவு செய்யப்பட்டுள்ளது.. மீதி எதிர்கால தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

(உ) இதற்குரியதான அவதானிப்புரைகள் பின்வருமாறு திருத்தப்படுதல் வேண்டும்.

நூலக பயன்பாட்டு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் காணாமற் போயுள்ள புத்தகங்களின் (1977 இலிருந்து 2016 வரை) எண்ணிக்கை 671 ஆகும். இதற்கு மேலதிகமாக மாணவர்களினால் பெறப்பட்டு மீண்டும்

கையளிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 154 ஆகும் . இது 1977 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு உரியதாவதோடு , இவற்றின் பெறுமதி ரூபா 31,181.75 ஆகும்.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் காணியொன்று கொள்வனவு செய்வதற்கு உயர் கல்வி அமைச்சுடன் இணைந்து பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரப்பட்டு பொருத்தமான காணியொன்று இனங்காணப்பட்டாலும் , காணியின் உரிமையாளர் அரசாங்க மதிப்பீட்டுத் தொகைக்கு காணியை வழங்குவதற்கு விரும்பவில்லை. அமைச்சு தலையிட்டு களனி பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப பீடத்திற்கு வழங்கப்பட்டும் காணியிலிருந்து இரண்டு ஏக்கரை இந்த நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஏ) 31,911/- ரூபாவைக் கொண்ட தொகைக்கு இரண்டு பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டமையினால் ஏற்பட்ட ஒன்றாவதோடு மீதித் தொகை பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டாலும் இது உரிய வருமான தலைப்பு இனங்காண முடியாது போன கொடுக்கல் வாங்கல் சிலவற்றின் மொத்தமாகும். எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து சீர்செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறியச் செய்விக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடிவடிக்கைத் திட்டம்

2016 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திட்டங்களுக்கு அமைவாக வெளிநாட்டு இணை நிறுவனங்களில் பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, உள்நாட்டில் பாளி டிப்ளோமா சான்றிதழ் பாடநெறியொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது . இதற்கு மேலதிகமாக புத்தபெருமானின் காலமும் சட்ட கோட்பாடும் பற்றிய பட்டப்பின் படிப்பு பாடநெறி தொடர்புபட்ட சிபாரிசுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பாடநெறிகளின் காலத் தேவையின் மீது 2018 ஆம் ஆண்டு சார்பில் தகுதிவிதிகள் திருத்தப்பட்டுள்ளன .

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

வருமானம் கூடுவதற்கு முக்கியமாக வெளிநாடுகளில் நடாத்திச் செல்லப்படும் பாடநெறிகளுக்கு மாணவர்களை கூடுதலாக பதிவு செய்து கொண்டமை காரணமாகும். உதாரணம் : சிங்கப்பூர் பாடநெறி / ஹொங்கொங் பாடநெறி

பாதீட்டு கட்டுப்பாடானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆகக் கூடுதலாக பேணப்பட்டுள்ளமை எமது கருத்தாகும். தொழிற்பாட்டு செலவுகள் கூடுதலாக மாணவர்கள் தொடர்புபட்ட நடவடிக்கைகளுக்காக. பயன்படுத்தப்பட்டது வருமானம் ஈட்டும் நிறுவனமொன்றாக முன்னோக்கிச் செல்கையில் இந்தப் பணிகள் சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்தப்பட வேணடுமென்பது எனது கருத்தாகும். ஆயினும், 2017 ஆம் ஆண்டில் இந்த நிலைமையை மேலும் நன்மை பயக்கும் விதத்தில் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் குறித்து வைத்துக் கொண்டேன்.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகள்**

(அ) களஞ்சிய கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டில் தேவையான சீர்செய்யும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியுமென்பது எனது கருத்தாகும்.

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கியதாக பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவேன்.

(இ) நூலகக் கட்டுப்பாடு

எடுத்துக்காட்டப்பட்ட விடயங்களுக்கு கவனம் செலுத்தி, உரிய செம்மைப்படுத்தல்களுக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மேற்போந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக வழங்கியுள்ள தெளிவுபடுத்தல்கள் தொடர்பில் நான் தனிப்பட்ட வகையில் பொறுப்புக் கூறுகின்றேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

இங்ஙனம்,

**கலாநிதி கொட்டபிட்டியே ராகுல தேரோ**
பணிப்பாளர்

பிரதிகள்: 01. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
02. செயலாளர், நிதி அமைச்சு
03. துணைவேந்தர், களனி பல்கலைக்கழகம்
04. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2016 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி

தலைவர்
கணக்காய்வுக் குழு
பாளி, .பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களனி பல்கலைக்கழகம்

**நிலையான சொத்துக்கள் அட்டவணையைத் தயாரித்தல் / இறுதி கணக்குகளுடன் ஒப்பிடுதல்**

2016-08-25 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 44 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பிடல் மற்றும் கணக்குகளின் ஒப்பீடு செய்யமுடியாத நிலுவைகள் தொடர்பில் சிபாரிசுகளை பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழு 2016-11-08 ஆம் திகதியன்று தங்களுடைய நிறுவனத்தினுள் மேற்கொண்ட பரிசோதனைக்கு அமைவாக சொத்துக்கள் அட்டவணை உட்பட நிலையான சொத்துக்கள் அட்டவணை ஒப்பிடப்படும் போது பின்வரும் வித்தியாசங்கள் காணப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் | 13,974,472.66 | 11,013,318.66 | 2,961,154.00 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 1,458,579,.00 | 643,878.25 | 814,700.15 |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 3,510,830.52 | 3,516,419.19 | 5,660.67 |
| | | | 3,781,515.42 |

மேற்குறிப்பிட்ட ரூபா 3,781,515.42 கொண்ட வித்தியாசம் தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன:

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணங்கள் தொடர்புபட்ட வித்தியாசம் ரூபா 2,961,154.00 | (189,395.82) | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் செலவினை நீக்குதல் |
| | (1,392,235.66) | சொத்துக்களை நீக்குதல் |
| | 173,867.75 | செலவு தலைப்புகளுக்கு இடையிலான மாற்றங்கள் |
| | (345,540.80) | |
| | (1,469,950.47) | இனங்காணப்பட்ட சொத்துக்கள் (2013 இற்கு முன்னர்) |
| | 262,100.00 | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் பெறுமதியை கணக்கிற்கு சீராக்கல் |
| ஆய்வுகூட உபகரணங்கள் தொடர்புபட்ட வித்தியாசம் ரூபா 814,700.75 | (27,726.00) | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் செலவினை நீக்குதல் |
| | (615,150.00) | சொத்துக்களை நீக்குதல் |
| | 349,542.00 | செலவு தலைப்புகளுக்கு இடையிலான மாற்றங்கள் |
| | (99,115.00) | |
| | 441,251.75) | இனங்காணப்பட்ட சொத்துக்கள் (2013 இற்கு முன்னர்) |
| | 19,000.00 | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் பெறுமதியை கணக்கிற்கு சீராக்கல் |
| | (435,873.74) | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் செலவினை |

| | | |
|---|---|---|
| தளபாடங்களும் பொருத்துகைகளும் தொடர்புபட்ட வித்தியாசம் ரூபா 5,660.67 | | நீக்குதல் |
| | (20,886.56) | சொத்துக்களை நீக்குதல் |
| | (85,011.75) | செலவு தலைப்புகளுக்கு இடையிலான மாற்றங்கள் |
| | (20,565.00) | இனங்காணப்பட்ட சொத்துக்கள் (2002 இற்கு முன்னர்) |
| | 556,675.50 | சொத்துக்கள் மீள் மதிப்பிடல் பெறுமதியை கணக்கிற்கு சீராக்கல் |

1. 2011 ஆம் ஆண்டில் நீக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து ரூபா 489,019.72 கொண்ட செலவு பெறுமதி மாத்திரம் ஏடுகளுடன் ஒப்பிடப்பட்டதோடு, செலவு விபரங்கள் கண்டறியமுடியாத சொத்துக்கள் பகுதியொன்றின் செலவு பெறுமதிகளும் இதுவரை பேரேட்டு பெறுமதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன

2. 2015 ஆம் ஆண்டில் மீள் மதிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் பழைய செலவு பற்றிய தகவல் தோற்றுவாய்கள் இல்லாத காரணத்தினால் அதன் தற்போதைய பெறுமதிக்கு மீள் மதிப்பிட்டு நிலையான சொத்துக்கள் அட்டவணையினுள் காட்டப்பட்டுள்ளதோடு, இது செலவு பேரேட்டுக் கணக்கினுள் நீக்கப்படவில்லை. உரிய செலவினை இனங்காண்பதற்கு போதுமான தகவல்கள் இல்லை.

3. 2011 ஆம் ஆண்டின் பின்னர், 2015 ஆம் ஆண்டுவரை கழிவுப் பொருட்களாக இனங்காணப்பட்டு ஏலம் மூலம் அப்புறப்படுத்துவதற்குள்ள பொருட்களின் ஒரு பகுதிக்கான செலவும் பேரேட்டுக் கணக்கில் நிலவுகின்றதோடு , நிலையான சொத்துக்கள் அட்டவணையினுள் உள்ளடக்கப்படவில்லை. (நீக்கப்பட்டுள்ள பொருட்களின் ஒரு பகுதிக்கான செலவுப் பெறுமதியை இனங்காண்பதற்கு போதுமான தகவல்கள் இல்லை)

**சிபாரிசு**

1. சொத்துக்கள் மீள் மதிப்பிடல் , இனங்காணப்பட்ட சொத்துக்களை நீக்குதல் மற்றும் சொத்துக்களை நீக்குவதற்குரியதாக பின்வரும் குறிப்புகளை கணக்கில் இடுவதற்கு குழுவினால் சிபாரிசு செய்யப்படுகின்றது.

    (i) இனங்காணப்பட்ட சொத்துக்களின் செலவுகளை நீக்குதல் ( )

    (ii) பெறுமானத் தேய்வினை நீக்குதல் ( )

    (iii) மீள் மதிப்பீட்டு பெறுமதியை கணக்கில் வைத்தல் ( )

    (iv) மீள் மதிப்பிடல் மேலதிக சீராக்கல் ( )

....................

2. செலவு தலைப்புகளுக்கு இடையில் மாற்றங்களுக்குரிய சீராக்கல்களை செய்து கணக்குகளுக்கு இடையில் நிலவும் வேறுபாடுகளை சீர்செய்தல் வேண்டும்.

**சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம்**

* இலங்கை அரசாங்கத்துறையின் கணக்கு தர இலக்கம் 7 இன் 71 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்தொன்றின் பயன்பாட்டுக் காலத்தை மதிப்பிடல்.

சொத்துக்கள் முகாமைத்துவ கொள்கைக்கு அமைவாக திட்டவட்டமான காலமொன்றுக்கு அல்லது சொத்தின் எதிர்கால பொருளாதார நலன் அல்லது சேவையினால் திட்டவட்டமான சராசரியொன்று பயன்படுத்தியதன் பின்னர் சொத்துக்களை நீக்கலாம். ஆதலால், சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் அதன் பொருளாதார ஆயுட்காலத்தை விட குறைவடையலாம். சொத்தொன்றின் பயன்பாட்டு ஆயுட்காலத்தை மதிப்பிடுவது நிறுவனம் மற்றும் சமமான சொத்துக்கள சம்பந்தமாக காணப்படும் அனுபவத்தின் மீதாகும். இதற்கமைவாக சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் மீள் மதிப்பிடும் போது கவனக் குறைவாக மீள் மதிப்பிடல் நூற்றுவீதத்திற்கு அமைவாக மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் எதிர்காலத்தில் பெறுமானத் தேய்வாக செய்யப்படலாம்.

தேவையான நடவடிக்கைகளுக்காக பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கணக்காய்வு குழுவுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

தலைவர்
கீத் திசாநாயக்க
சிரேட்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்

| | | |
|---|---|---|
| குழு உறுப்பினர் | குழு உறுப்பினர் | குழு உறுப்பினர் |
| ரசிகா ரிஷாந்தி | சுமித் ஜயவீர | சஞ்சீவ திசாநாயக்க |
| கணக்காய்வு உதவியாளர் | கணக்காய்வு உதவியாளர் | கணக்காய்வு உதவியாளர் |

பிரதி: பணிப்பாளர் தேரோ அவர்கள், பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

2017-02-28

**2017-02-27 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 47 ஆவது கணக்காய்வுக் குழு கூட்டத்தின் தீர்மானம்**

**சபை பத்திர இலக்கம் 02**

**நிலையான சொத்துக்கள் அட்டவணையைத் தயாரித்தல் / இறுதி கணக்குகளுடன் ஒப்பிடுதல்**

நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பிடல் மற்றும் கணக்குகளில் ஒப்பிட முடியாத நிலுவைகள் சம்பந்தமாக 2016 ............... ஆம் திகதி செய்யப்பட்ட பரிசீலனைக்கு அமைவாக செய்யப்பட்டிருந்த சிபாரிசுகள் கணக்காய்வு குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ...................... ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் இது சம்பந்தமாக அரசாங்க கணக்காய்வு பிரிவின் ஊடாக வழங்கப்பட்ட சிபாரிசானது முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பித்து முகாமைத்துவ சபையின் சிபாரிசை உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு தொடர்புபடுத்தி அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது செலவு தலைப்புகளுக்கு இடையிலான மாற்றங்களை சீர்செய்து தெளிவாக பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டது. இதற்குத் தேவையான பத்திரத்தையும் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| சபை பத்திர இலக்கம் 05<br><br>**நிலையான சொத்துக்கள் அட்டவணையைத் தயாரித்தல் / இறுதி கணக்குகளுடன் ஒப்பிடுதல்**<br><br>இந்த நிறுவனத்தின் 2015-12-31 ஆம் திகதியன்றுக்கான சொத்துக்களுக்கு அமைவாக நிறுவனத்திற்குள் கண்டுபிடிக்க இயலுமாயிருந்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் அட்டவணை அன்றைய தினத்திற்கான இறுதி கணக்குகளுடன் சொத்து வகைகளுக்கு அமைவாக ஒப்பிடப்பட்டது. இதன் போது 2015 ஆம் ஆண்டிலிருந்து முன்னைய கிட்டிய ஏழு (07) வருடங்களுக்கு மாத்திரம் மாற்றத்திற்கான காரணங்கள் கண்டு பிடிக்க முடியுமானதோடு, இதற்கு முன்னர் நிலவிய நிலுவைகளில் மாற்றங்கள் நிலவினாலும் அதற்கு தெளிவான காரணங்கள் கண்டுபிடிக்க முடியாமற் போனது. மேற்போந்த நிலுவைகளுக்கான மாற்றங்களுக்கு பின்வரும் விடயங்கள் தாக்கத்தை செலுத்தியுள்ளதாக கருதலாமென குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>(1) மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் செலவு<br><br>(2) 2011 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து (05) வருட காலத்திற்குள் கணக்குகளிலிருந்து | இது சம்பந்தமாக குழுவொன்று நியமிக்கப்பட்ட நியாயமான காரணங்களைக் குறிப்பிட்டு இந்த நிலுவைகளுக்கான மாற்றங்கள் சம்பந்தமாக தீர்மானமொன்றை எடுப்பது பொருத்தமானதென குறிப்பிடப்பட்டது.<br><br>இதற்காக களனி பல்கலைக் கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு, உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டதோடு, கல்வி சார் பிரதிநிதி ஒருவரையும் நியமிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் |

| | | |
|---|---|---|
| நீக்கப்படாத கழிவுப் பொருட்களின் செலவு<br><br>(3) இனங்காணப்படாத நன்கொடைகள்<br><br>இதற்கமைவாக, நிலையான சொத்து அட்டவணைக்கும் இறுதிக் கணக்குகளுக்கும் இடையில் சுமார் 4.4 மில்லியன் வித்தியாசத்தினை காட்டுகின்றது.<br><br>இது சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகளுக்காக கணக்காய்வுக் குழுவின் சிபாரிசுகளுக்காகவும் ஆலோசனைகளுக்காகவும் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.<br><br>நிலையான சொத்துக்களின் அட்டவணையினை ஒப்பிடும் போது 2015-12-31 ஆம் திகதியன்றுக்கான பொழிப்புத் தகவல்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| | | |

| | நிலையான சொத்துக்கள் அட்டவணை (ரூபா சதம்) | இறுதிக் கணக்குகள் (ரூபா சதம்) |
|---|---|---|
| அலுவலக மற்றும் கற்றல் உபகரணங்கள் | 11,339,930 | 15,433,051 |
| தளபாடங்களும் பொருத்துகை களும் | 3,192,214 | 3,516,492 |
| மோட்டார் வாகனங்கள் | 10,250,000 | 10,250,000 |
| பாடசாலை புத்தகங்கள், சஞ்சிகைகள் | 8,185,105 | 8,185,105 |
| | 32,967,249 | 37,384,648 |
| | | 4,417,340 |

| | | |
|---|---|---|
| பிற விடயங்கள் இலக்கம் 01<br><br>**2016 கல்வி ஆண்டினுள் நடாத்தப்படும் சுய நிதிப் பாடநெறிகளுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு**<br><br>மேற்போந்த சுயநிதிப் பாடநெறிகளுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமாக நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக சிரேட்ட உதவி பதிவாளரிடம் வினவப்பட்டது. | இது பற்றி கலந்துரையாடிய கணக்காய்வு குழு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 04/2016 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட 2016 கல்வி ஆண்டினுள் நடாத்தப் படும் சுய நிதிப் பாட நெறிகளுக்கான வரவுசெலவுத் திட்ட அட்டவணை 2016-08-25 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கணக்காய்வு குழுவுக்கு சமரப்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது உரிய பாடநெறியின் இறுதியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் அதனை நடைமுறை ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கு கடினமானமையினால் இதுவரை கிடைத்துள்ள நிதி தொகைக்கு சமமான அடிப்படையில் சகல கொடுபப்னவுகளையும் (ஊழியர் கொடுப்பனவுகள் அடங்கலாக) செலுத்தலாமென கணக்காய்வுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. | சிரேட்ட உதவிப் பதிவாளர்<br><br>சிரேட்ட உதவி நிதிப் பொறுப்பாளர் |

